# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2018–ம் வருடம் ஜீலை மாதம் 11–ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருள்கள்</u>

1) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் 38 பொது சுகாதார துப்புரவு பணியாளர்கள் மூலம் நாள்தோறும் அனைத்து வீடுகளிலும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தள்ளுவண்டியில் பெற்று வருகின்றனர். மேற்படி பொது சுகாதார துப்புரவு பணியாளர்களின் பணிச்சுமையை குறைக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 18–05–2018–ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் துப்புரவு பணியாளர்களின் நலன் கருதி சிறிய மின்கலத்துடன் இயங்கும் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் வாங்கி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் 6 எண்ணம் வாங்க மதிப்பீடு ரூ.11.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனம் வாங்க இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி பெற்று வாங்க சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1098/2018/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1292</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

2)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கதவு எண்.33/41பி, என்ற எண் கொண்ட கட்டிடத்திற்கு குடியிருப்பு பயன்பாட்டில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட குடியிருப்பு கட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பு வரிவிதிப்பு வீட்டு உபயோகம் அல்லாத பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பிற்கு கதவு எண்.33/41பி என வழங்கவும், வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பிலிருந்து வீட்டு உபயோக இணைப்பாக மாற்றம் செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 941/2018/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1293</u>**

அனுமதிக்கப்பட்டது.

3) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கதவு எண். 23/73/1 என்ற எண் கொண்ட புதிய கட்டிடத்திற்கு குடியிருப்பு பயன்பாட்டில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப்பணி மேற்கொண்ட போது வீட்டு உபயோகம் அல்லாத (Non Domestic) முறையில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி கட்டிடத்திற்கு வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பிற்கு கதவு எண். 26/73/1 என வழங்கவும், வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பிலிருந்து வீட்டு உபயோக இணைப்பாக மாற்றம் செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 941/2018/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1294</u>**

அனுமதிக்கப்பட்டது.

4)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட நான்கு மேல் நிலை நீர்த்தேக்க குடிநீர் தொட்டிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டதற்கான கட்டணம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிலோ லிட்டருக்கு ரூ. 4.50 (Tariff) வீதம் கணக்கிடப்பட்டு இதுநாள் வரை செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (WS 2) அரசாணை எண். 39, நாள் 17–04–2018 (ம) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.F.31810/Tariff Revision /AEII/O & M/2017 dated 24-04-2018-ன் மூலம் தெரிவிக்கப்பட்டதன் படியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நீரேற்றம் செய்யப்படும் கட்டண அளவு விலை விகிதம் (Tariff)ரூ.9.45/– கிலோவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணத்தை வருடத்திற்கு 5%(சதவீதம்)உயர்த்தி குடிநீர் கட்டணம் வசூலிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே

01–04–2018 முதல் ( $9 \times \frac{5}{100} =$ 9.45) கிலோ லிட்டருக்கு ரூ. 9.45 வீதம் குடிநீர் கட்டணம் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1388/2017/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1295</u>**

அனுமதி வழங்கப்பட்டது. மேலும் குடிநீர் உபவிதிகளில் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் உயர்த்தி வசூல் செய்வதற்கு திருத்தம் மேற்கொள்ள அனுமதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் அனுமதிக்கப்பட்டது.

5) ஒகி புயல் நிவாரண நிதியின் கீழ் (SDRF)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக EB Metering Pane/with Digital Timer Box 30 எண்ணம் விநியோகம் செய்யும் பணியை ரூ.4,25,000/–மதிப்பீட்டில் செய்ய 20–04–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் (மதிப்பீட்டினைவிட) |
|---|---|---|
| 1. | Southern Solid Waste Management Service Ltd., | –24.90% குறைவு |
| 2. | T.R. Traders Thazhakudy | –36.99% குறைவு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Southern Solid Waste Management Service Ltd., நிறுவனம் மதிப்பீட்டினை விட –24.90%குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ற்றி. ஆர். டிரேடர்ஸ் நிறுவனத்தார் 36.99% குறைவாக கொடுத்துள்ளார்.

மேலும் T.R. Traders நிறுவனம் தனது 31–05–2018–ம் தேதிய கடிதத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே தான்யங்கி சுவிட்ச் விநியோகம் செய்துள்ளதாகவும் ஆவணங்கள் அனைத்தையும் ஒப்பந்தப்புள்ளியில் இணைத்துள்ளதாகவும் Auto Lite make விநியோகம் செய்ய இருப்பதாகவும் 1 வருட உத்திரவாதமும் மற்றும் 2 வருட பராமரிப்பு உத்திரவாதமும் வழங்கியும், EB Metering Box ஒப்பந்த நமூனாவில் உள்ள Specification படியும் நகராட்சி அலுவலர்களின் ஆலோசனையின் படியும் முழு திருப்திகரமாக விநியோகம் செய்வதாகவும் தெரிவித்துள்ளார். எனவே ஒப்பு நோக்கு பட்டியலின் படி மதிப்பீட்டினை விட மிகக் குறைவாகக் கொடுத்துள்ள (36.99 சதவீதம் குறைவு) T.R. Traders நிறுவனத்திற்கு விநியோகம் உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1296</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

6) சட்ட மன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட சாரோடு ஜங்ஷனில் இருந்து வெட்டுக்காட்டுவிளை முத்தாரம்மன் கோவில் வரை உள்ள வடிகாலுக்கு மேல் மூடி அமைக்கும் பணியை ரூ.1.15 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 08–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டினைவிட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம்) |
| 1. | திரு. வி. ராஜேந்திரன் | – | 1.30 |
| 2. | திரு. என். ஜான்ஜஸ்டஸ் | 0.52 | – |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. என். ஜான்ஜஸ்டஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 358/2018/இ1)

<u>**நகர் மன்றத் தீர்மான எண்.1297**</u>

அனுமதி வழங்கப்பட்டது.

7) சட்ட மன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பத்மனாபபுரம் கோட்டையில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தில் முதல் தளத்தில் நூலகம் கட்டும் பணியை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 08–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டினைவிட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம்) |
| 1. | திரு. வி. ராஜேந்திரன் | 0.06 | – |
| 2. | திரு. என். ஜான்ஜஸ்டஸ் | – | 0.16 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வி.ராஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 358/2018/இ1)

<u>**நகர் மன்றத் தீர்மான எண்.1298**</u>

அனுமதி வழங்கப்பட்டது.

8) பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3 கோட்டை 2–வது தெரு முதல் பத்திரகாளியம்மன் கோவில் வரைஅலங்கார ஓடு பதிக்கும் பணியை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 08–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டினைவிட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம்) |
| 1. | திரு. சி. ஜெகஸ்லால் | 0.007 | – |
| 2. | திரு. என். ஜான்ஜஸ்டஸ் | – | 1.825 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஜெகஸ்லால் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 358/2018/இ1)

**நகர் மன்றத் தீர்மான எண்.1299**

அனுமதி வழங்கப்பட்டது.

9) பாராளு மன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 ஹிமாலயா தெருவில் அலங்கார ஓடு பகுதிக்கும் பணியை ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 08–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டினைவிட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம்) |
| 1. | திரு. ஜி.சுந்தர்ராஜ் | 0.01 | – |
| 2. | திரு. சி. பொன்னப்பலம் | – | 1.36 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜி. சுந்தர்ராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 358/2018/இ1)

**நகர் மன்றத் தீர்மான எண்.1300**

அனுமதி வழங்கப்பட்டது.

10) பாராளு மன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 19 வார்டு பிரம்மபுரம் பள்ளிக் கூடம் அருகே சமுதாயக் கூடம் அருகில் கழிவறை (ம) குளியலறை கட்டும் பணியை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 08–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டினைவிட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம்) |
| 1. | திரு. சி. பொன்னம்பலம் | 0.13 | – |
| 2. | திரு.ஜி. சுந்தர்ராஜ் | – | 13.74 |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. பொன்னம்பலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 358/2018/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1301</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

11) இந்நகராட்சி தக்கலை பேட்டை சந்தை மற்றும் மீன் சந்தைகளில் ரூ.1,75,000/– மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 22–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீடு விகிதம்** |
|---|---|---|
| 1. | பி. ராபின்சன்<br>654, குழிக்கோடு | 0.08% குறைவு |
| 2. | சி. ஜெகஸ்லால்<br>ஒப்பந்தக்காரர் | 1.52% அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பி. ராபின்சன் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 587/2018/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1302</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

12) 2016–2017–ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்கு தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கை கணனி மூலம் தட்டச்சு செய்து புத்தக வடிவில் பெறப்பட்ட வகையில் அருந்ததி நிறுவனத்திற்கு ரூ.9680/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண். பி1/1517/2015)

<u>**நகர் மன்றத் தீர்மான எண்.1303**</u>
அனுமதிக்கப்பட்டது.

13) வழக்கு எண். WP (MD) 4877/3-2017 எதிராக வழக்கு எண். Con,P (MD) No.81/2018- வழக்கு தொடர்பாக மதுரை நீதி மன்றத்தில் வாதாடியதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும் ) வழக்கறிஞர் திரு. ஆயிரம் கே. செல்வகுமார் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு நகராட்சி ஆணையர் திரு.தே. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் வழங்கப்பட்டது. மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து ஆணையருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(சி1/1748/2014)

<u>**நகர் மன்றத் தீர்மான எண்.1304**</u>
அனுமதிக்கப்பட்டது.

14) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ன் கீழ் எடுத்துச் செய்யப்படவுள்ள வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தினமணி நாளிதழில் 26–05–2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான தொகை ரூ.21090/–ஐ Express Publications (Madurai) Limited நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். இ1/4230/2017)

<u>**நகர் மன்றத் தீர்மான எண்.1305**</u>
அனுமதிக்கப்பட்டது.

15) பொது நிதி 2017–18–ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–16, காந்திநகர் பகுதியில் ரூ.70,000/– மதிப்பீட்டில் பழுதான சாலைகளை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | டெண்டர் விகிதம் |
|---|---|---|
| 1. | ஜி. சுந்தர்ராஜ் | மதிப்பீட்டினை விட0.02 சதவீதம் குறைவு |
| 2. | சி. ஸ்டாலின் | மதிப்பீட்டினை விட 0.06 சதவீதம் குறைவு. |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அதிகம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள( மதிப்பீட்டினை விட –0.06 சதவீதம் குறைவு ) திரு. சி. ஸ்டாலின் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 797/2018/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1306</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

16) சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் இந்நகராட்சி உரக்கிடங்கில் குப்பை பிரிக்கும் இயந்திரம் நிறுவுதல் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | டெண்டர் விகிதம் |
|---|---|---|
| 1. | Southern Solid Waste Management service | மதிப்பீட்டினை விட2.13சதவீதம் அதிகம். |
| 2. | Jayababa Traders | மதிப்பீடு விலைவிகிதம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைறவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (மதிப்பீட்டு விகிதம்) Jayababa Traders நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 899/2018/சி1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1307</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

17)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ் இந்நகராட்சி உரக்கிடங்கில் பைரோளசிஸ் ஆலை நிறுவுதல் பணிக்கு 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | டெண்டர் விகிதம் |
|---|---|---|
| 1. | Southern Solid Waste Management service | மதிப்பீடு விலைவிகிதம் |
| 2. | Jayababa Traders | மதிப்பீட்டினை விட 2.03 சதவீதம் அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (மதிப்பீட்டு விலைவிகிதம் ) M/s. Southern Solid Waste Management Service நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 899/2018/இ1)

**நகர் மன்றத் தீர்மான எண்.1308**

அனுமதி வழங்கப்பட்டது.

18) தமிழ் நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–19–ன் கீழ் இந்நகராட்சிக்கு சாலை பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்காணும் நிதி ஒதுக்கீடு ஏற்புடையதாயின் சாலைப் பணிகளை மேற்கொள்ள நகர் மன்றத்தில் தீர்மானம் இயற்றி அதனை நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அனுப்பி வைக்குமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 29–06–2018–ம் தேதிய ந.க.எண்.12981/2018/இ3, எண்ணுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட மானிய நிதி | – | 0.38 கோடி |
| 2. | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | – | 0.30 கோடி |
| 3. | மாநில நிதிக்குழு மான்ய ஊக்க நிதி | – | 0.22 கோடி |
| 4. | நகராட்சி பங்களிப்பு தொகை | – | 0.10 கோடி |
| | **மொத்த மதிப்பீட்டு தொகை** | – | **1.00 கோடி** |

மேற்கண்ட ஒதுக்கீட்டினை ஏற்று **1.00** கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்து பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1020/2018/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1309, நாள் 11–07–2018.</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

**19)** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகன எண்கள் TN75P9346, TN74Z 2536 மற்றும் TN74D4151-க்கு **08–07–2018** முதல் **08–07–2019** வரையிலான காலங்களுக்கு வாகன விபத்து காப்பீட்டு பிரிமியம் செலுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி அதற்கான தொகை செலுத்தியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1256/2013/அ2)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1310</u>**

அனுமதிக்கப்பட்டது.

**20)**இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN75B4577 TATA ACE வாகனத்தின் நான்கு டயர்கள் மற்றும் உதிரி டயர் ஒன்றும் சேர்த்து மொத்தம் **5** டயர்களும் மிகவும் தேய்ந்த நிலையில் உள்ளது எனவும் புதிய **5** டயர்கள் வாங்குவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.**12,000/–** என அறிக்கை வழங்கி உள்ளார். எனவே புதிய டயர்கள் **5** எண்ணம் வாங்கி பொருத்துவதற்கும், செலவு தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுவதுடன் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(1410/2017/அ2)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1311</u>**

அனுமதிக்கப்பட்டது.

**21)** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN75P 9346 வாகனத்தின் மின்கலப் பெட்டி பழுதாகி விட்டதால் புதிய மின்கலப்பெட்டி வாங்குவதற்கும் உத்தேச செலவுத் தொகை ரூ.**10,000/–**ஐ பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுவதுடன் அவசர அவசியம் கருதி

விலைப்புள்ளிகள் பெற நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1256/2013/அ2)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1312</u>**

அனுமதிக்கப்பட்டது.

22)நகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்கண்ட மாதங்களுக்கு பயணப்படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| மாதம் | | தொகை ரூ. |
|---|---|---|
| 03/2018 | – | 5290/– |
| 04/2018 | – | 1270/– |
| 05/2018 | – | 4790/– |

(ந.க.எண்.1566/2015/பி1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1313</u>**

அனுமதிக்கப்பட்டது.

23) இந்நகராட்சி கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு. எம். சீனிவாசராகவன் | பொறியாளர் | 3/2018 | 3180/– |
| 2. | திரு. எம். சீனிவாசராகவன் | பொறியாளர் | 5/2018 | 6360/– |
| 3. | திருமதி. எஸ். சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 4/2018 | 1260/– |
| 4. | திருமதி. எஸ். சுதா | “ | 5/2018 | 2840/– |
| 5. | திரு. கே. ஜெயன் பெல்லார்மென் | உதவியாளர் | 5/2018 | 3080/– |

(ந.க.எண்.1566/2015/பி1)

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1314</u>**

அனுமதிக்கப்பட்டது.

24) இந்நகராட்சிக்குச் சொந்தமான குப்பைகளை சேகரிக்கும் டம்பர்பின் பெட்டிகள் 20 எண்ணம் மிகவும் பழுதடைந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அதனை உடனடியாக சரி செய்து தரும்படி ஓட்டுநர் அறிக்கை செய்துள்ளார்.

இவ்வலுவலக துப்புரவு ஆய்வர் தனது 25–06–2018–ம் தேதிய அறிக்கையில் ஓட்டுநரின் அறிக்கையின்படி டம்பர்பின் பெட்டிகளை ஆய்வு செய்யப்பட்டதில் 20 எண்ணம் பழுதடைந்துள்ளதால் அவைகளை பழுது நீக்கம் செய்வதற்கு 1 எண்ணத்திற்கு தோராயமாக ரூ.10,200/–வீதம் 20 எண்ணம் பழுது நீக்கம் செய்ய ரூ.2,04,000/– ஆகும் எனவும் பொதுச் சுகாதார அவசர அவசியம் கருதி உடனடியாக பழுது நீக்கம் செய்து தரவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே ஓட்டுநர் மற்றும் துப்புரவு ஆய்வரின் அறிக்கையின்படி பொதுச் சுகாதார அவசர அவசியம் கருதி பழுதடைந்துள்ள 20 எண்ணம் டம்பர் பின்களை பழுது நீக்கம் செய்வதற்கும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/–க்கும் மேற்படி செலவுத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1174/2018/அ2)

<u>நகர் மன்றத் தீர்மான எண்.1315</u>

அனுமதிக்கப்பட்டது.

25)இந்நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவில் உள்ள கழிவுகளை சேகரிப்பதற்குரிய இரும்பு தொட்டிகளை (டம்பர் பின்கள்) பழுது நீக்கம் செய்வதற்கு 10–07–2018–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி மூன்று நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தப்புள்ளியில் அளித்துள்ள விலை விவரம் (டம்பர் பின் 1–க்கு) |
|---|---|---|
| 1. | தந்தை பெரியார் ஒப்பந்தக்காரர் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், 63 , பாரதியார் தெரு, சங்கரன்கோவில்–627 754. | ரூ.10,200/– |
| 2. | திருநெல்வேலி ஸ்ரீகாமாட்சியம்மன் உலோகத் தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கம், 37, சங்கரன் கோவில் ரோடு, திருநெல்வேலி–6. | ரூ.9,850/– |
| 3. | திருநெல்வேலி, மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் சேவைதொழிற் கூட்டுறவு சங்கம், | ரூ. 10,500/– |

| | | |
|---|---|---|
| | திருநெல்வேலி. | |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் திருநெல்வேலி ஸ்ரீகாமாட்சியம்மன் உலோகத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

(ந.க.எண். 1174/2018/அ2)

<u>நகர் மன்றத் தீர்மான எண்.1316</u>

அனுமதி வழங்கப்பட்டது.

26) குடிநீர் விநியோக நிதி 2017–18–ன் கீழ் ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வார்டு பகுதிகளிலும் பகிர்மான குழாய் (ம) மின் மோட்டார்கள் பழுதுபார்ப்பு பணிகள் செய்வதற்கு 29–06–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி வேலைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | டெண்டர் விகிதம் |
|---|---|---|
| 1. | சி. சந்திரசேகர் | மதிப்பீட்டினை விட 0.26 % குறைவு. |
| 2. | ஜி.ஜார்ஜ் | மதிப்பீட்டினை விட 1.93 % அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (மதிப்பீட்டினை விட 0.26 சதவீதம் குறைவு) திரு. சி. சந்திரசேகர் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1077/2018/இ1)

<u>நகர் மன்றத் தீர்மான எண்.1317, நாள் 11–07–2018.</u>

அனுமதி வழங்கப்பட்டது.

27) நகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்கண்ட மாதங்களுக்கு பயணப்படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| மாதம் | தொகை<br>ரூ. |
|---|---|
| 12/2017 | 2260/– |
| 01/2018 | 1500/– |
| 02/2018 | 2980/– |

(ந.க.எண். பி1/1566/2015)

<u>நகர் மன்றத் தீர்மான எண்.1318</u>

அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/–
தனி அலுவலர்
பத்மனாபபுரம் நகராட்சி.

//உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.